**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.03.2018–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 1**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி 2018 மாதத்திய நாட்குறிப்பு தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** தனி அலுவலர் பார்வையிடலாம்.

(ந. க. எண். 195/2017/அ1)

**தீர்மான எண் :** 791
**தீர்மானம் : ஆணையாளரின் 2018 பிப்ரவரி மாத நாட்குறிப்பு பார்வையிடப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.03.2018–ம் நாளன்று நடைபெற்ற
தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்

பொருள் : 2

புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2017–18ன் கீழ் பணி மேற்கொள்ள 07.03.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சி TN 36 X 0283 வாகனம் தரச்சான்றிதழ் பெறுவதற்கான பழுது நீக்கப்பணிகளை மேற்கொள்ளுதல். | 1.20 இலட்சம் | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | 0.3 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | | | ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ் | 6.78% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை ஏற்கலாம்.

(ந.க.எண். 111/18/இ1)

**தீர்மான எண் :** 792
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.03.2018–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

## பொருள் : 3

புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2017–18ன் கீழ் பணி மேற்கொள்ள 07.03.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சி TN 36 AZ 7382 கழிவுநீர் வாகனம் தரச்சான்றிதழ் பெறுவதற்கான பழுது நீக்கப்பணிகளை மேற்கொள்ளுதல். | 0.65 இலட்சம் | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | 0.1 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | | | ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ் | 12.9 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை ஏற்கலாம்.

(ந.க.எண். 110/18/இ1)

**தீர்மான எண் :** 793
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.03.2018–ம் நாளன்று நடைபெற்ற
தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்

பொருள் : 4

இந்நகராட்சியின் அலுவலக கட்டிடம் 1970–ம் ஆண்டு கட்டப்பட்டு, 48 ஆண்டுகள் கடந்த நிலையில் தற்போது பழுதடைந்துள்ளதால், அதனை அகற்றி விட்டு புதிதாக அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு வரைபடம் தயார் செய்யவும், (EDCR) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் அவர்களுக்கு மின்னஞ்சல் வழியாக பதிவேற்றம் செய்வதற்கும், தேசிய நெடுஞ்சாலை துறையின்தீயணைப்புத்துறை மற்றும் வருவாய் துறையினரின் தடையின்மை சான்று பெறுவதற்கும் வரைபடம் அனுப்புவதற்கும் உத்தேச செலவினம் ரூ. 75,000/– அனுமதி வழங்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம்.
(ந. க. எண். 527/2018/இ1)

**தீர்மான எண் :** 794
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.03.2018–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 5

இந்நகராட்சியில் **2018–2019–ம்** ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்ற ஒப்புதல் வழங்கலாம்.

(ந. க. எண். 270/2015/அ1)

**தீர்மான எண் :** 795

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது.

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.03.2018–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 6

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை உள்ள மூன்றாண்டு காலத்திற்கு, 09.03.2018 அன்று மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது, மேற்படி மறு ஏலம் மறறும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏல கேள்வி கோரிய கீழ்கண்டுள்ள நபர்களுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

2018–19 முதல் 2020–2021 முடிய உள்ள 3 ஆண்டுகளுக்கான சுங்கம் மற்றும் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கான பொது ஏலம்.

| வ. எண் | உரிமம் விவரம் | தற்போது ஏலத்தில் உயர்ந்த கேள்வி கேட்ட ஏலதாரர்களின் பெயர் | முந்தைய ஆண்டுகளில் ஏலத்தொகை | | பொது ஏலத்தில் கேட்கப் பட்ட உயர்ந்த ஏலக் கேள்வி தொகை | மூடி முத்திரையிடப்பட்ட வரப்பட்ட ஒப்பந்தப் புள்ளி யின் உயர்ந்த ஏல கேள்வி |
|---|---|---|---|---|---|---|
| | | | சென்ற ஆண்டு தொகை ரூ. | சராசரித் தொகை ரூ. | | |
| 1 | புன்செய் புளியம்பட்டியில் புதன் கிழமை மற்றும் வியாழன் தோறும் கூடும் வாரச் சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | 1. ஏலதாரர் பெயர் : திரு.கி. நடராஜன், கோயமுத்தூர். | 2784915/– | 2654405/– | 3485000/– | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |
| 2 | புன்செய் புளியம்பட்டி நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1. ஏலதாரர் பெயர் :திரு. ஜெ.வெங்கடாசலம் , திருப்பூர். | 557865/– | 531722/– | 593000/– | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |
| 3 | வாரச்சந்தையில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1. ஏலதாரர் பெயர் : திரு.கி. நடராஜன், கோயமுத்தூர். | 29768/– | 28373/– | 32000/– | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |
| 4 | வாரச்சந்தையில் உள்ள புளிய மரங்களின் மேற்பலனை அனுபவிக்கும் உரிமம். | – | – | – | ஏலத்தில் ஒருவரும் கலந்துக் கொள்ள வில்லை | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | வாரச்சந்தையில் குப்பை சேகரிக்கும் உரிமம். | – | – | – | ஏலத்தில் ஒருவரும் கலந்துக் கொள்ள வில்லை | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |
| 6 | பேருந்து நிலையத்தில் எடை பார்க்கும் கருவி அமைத்தல் | – | – | – | ஏலத்தில் ஒருவரும் கலந்துக் கொள்ள வில்லை | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |
| 7 | நகராட்சி அலுவலகம் திருமண மண்டபம் மற்றும் மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் உள்ள தென்னை மரங்களின் மேற்பலன் | – | – | – | ஏலத்தில் ஒருவரும் கலந்துக் கொள்ள வில்லை | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |

அலுவலக குறிப்பு

1. மேற்கண்ட குத்தகை இனங்களில் வரிசை எண். 1,2 மற்றும் 3–ல் சென்ற ஆண்டு மற்றும் மூன்றாண்டு சராசரி ஏலத்தொகையை காட்டிலும் கூடுதலாக உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகை கோரப்பட்டுள்ள மேற்படி ஏலதாரருக்கு உரிமம் வழங்கலாம்.

2. மேற்கண்ட குத்தகை இனங்களில் வரிசை 4 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு ஏலம் மறறும் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளாததால் இக்குத்தகை இனங்களுக்கு மறு ஏலம் கோரலாம்.

**தீர்மான எண் :  796**
**தீர்மானம் :  அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

,

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.03.2018–ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்

பொருள் : 7

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை உள்ள மூன்றாண்டு காலத்திற்கு, 27.03.2018 அன்று மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது, மேற்படி மறு ஏலம் மறறும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏல கேள்வி கோரிய கீழ்கண்டுள்ள நபர்களுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

2018–19 முதல் 2020–2021 முடிய உள்ள 3 ஆண்டுகளுக்கான சுங்கம் மற்றும் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கான பொது ஏலம்.

| வ. எண் | உரிமம் விவரம் | தற்போது ஏலத்தில் உயர்ந்த கேள்வி கேட்ட ஏலதாரர்களின் பெயர் | முந்தைய ஆண்டுகளில் ஏலத்தொகை | | பொது ஏலத்தில் கேட்கப்பட்ட உயர்ந்த ஏலக் கேள்வி தொகை | மூடி முத்திரையிடப்பட்ட வரப்பட்ட ஒப்பந்தப் புள்ளி யின் உயர்ந்த ஏல கேள்வி |
|---|---|---|---|---|---|---|
| | | | சென்ற ஆண்டு தொகை ரூ. | சராசரித் தொகை ரூ. | | |
| 1 | வாரச்சந்தையில் உள்ள புளிய மரங்களின் மேற்பலனை அனுபவிக்கும் உரிமம். | 1. ஏலதாரர் பெயர் :திரு. ஜெ.வெங்கடாசலம் , திருப்பூர். | 7994/– | 7619/– | 8500/– | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |
| 2 | வாரச்சந்தையில் குப்பை சேகரிக்கும் உரிமம். | 1. ஏலதாரர் பெயர் :திரு. ஜெ.வெங்கடாசலம் , திருப்பூர். | 3638/– | 3468/– | 4000/– | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |
| 3 | பேருந்து நிலையத்தில் எடை பார்க்கும் கருவி அமைத்தல் | – | – | – | ஏலத்தில் ஒருவரும் கலந்துக் கொள்ள வில்லை | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |
| 4 | நகராட்சி அலுவலகம் திருமண மண்டபம் மற்றும் மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் உள்ள தென்னை மரங்களின் மேற்பலன் | 1. ஏலதாரர் பெயர் :திருமதி. ரா. ராஜாத்தி, க/பெ. எம்.கே.ராஜேந்திரன், | 8986/– | 8565/– | 5900/– | ஒப்பந்தப் புள்ளி ஒருவரும் கொடுக்க வில்லை |

அலுவலக குறிப்பு

1. மேற்கண்ட குத்தகை இனங்களில் வரிசை எண். 1 மற்றும் 2–ல் சென்ற ஆண்டு மற்றும் மூன்றாண்டு சராசரி ஏலத்தொகையை காட்டிலும் கூடுதலாக உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகை கோரப்பட்டுள்ள மேற்படி ஏலதாரருக்கு உரிமம் வழங்கலாம்.

2. மேற்கண்ட குத்தகை இனங்களில் வரிசை 4 –ல் உள்ள குத்தகை இனத்தில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள தென்னை மரங்களில் சுமார் 35 தென்னை மரங்கள் பட்டுப்போய் உள்ளது. இம்மரங்களைவெட்டுவதற்கு சத்தியமங்கலம், வருவாய் வட்டாட்சியர் அவர்களின் ந.க.எண். 9450/2017/அ3 நாள்.07.03.2018 தேதிய கடிதத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3. மேற்கண்ட குத்தகை இனங்களில் வரிசை 3–ல் உள்ள குத்தகை இனத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன் வரவில்லை. மேலும் பேருந்து நிலையத்தில் எடை பார்க்கும் கருவிக்கு உரிய மின் வசதி இல்லாததால் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஏனவே இக்குத்தகை இனத்தினை நீக்கம் செய்யலாம்.

**தீர்மான எண் :** 797
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.03.2018–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 8**

நகராட்சிகளில் செயல்படும் அரசு கல்வி நிறுவனங்கள், நகராட்சி கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் (சுய நிதி பாடப் பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) மற்றும் அவை சம்மந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்து வரி விதிக்கப்பட வேண்டும் என தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீடு எண். 33, நாள் 25.01.2018–ல் (Part–V Amendments to the Tamil Nadu District Municipalities Act 1920 5 in section 83 in sub section (1) ) அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசிதழினை பின்பற்றி அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7234/2014/ஆர்1, நாள். 15.03.2018–ல் அனைத்து நகராட்சிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேற்படி சொத்து வரியினை இந்நகராட்சியில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் விதிக்கும் பொருட்டு ஈரோடு மாவட்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பதிவு செய்து அனுமதிக்கலாம்.
(ந. க. எண். 251/2018/அ2)

**தீர்மான எண் :** 798
**தீர்மானம் :** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.03.2018–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 9**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் அலுவலகத்தில் உள்ள பிரிண்டர்களுக்கு டோனர் புதிதாக வாங்குவதால் அதிக செலவினம் ஏற்படுகிறது. எனவே, அதனை தவிர்க்கும் பொருட்டு பயன்படுத்த இயலாத டோனர்களில் மீண்டும் மை நிரப்பி மறு சுழற்சி முறையில் பயன்படுத்திக் கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எ;ண. 435/18/இ1)

**தீர்மான எண் :** 799
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.03.2018–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 10**

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மத்திய, மாநில மற்றும் நகராட்சி நிதி உதவியுடன் தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கு மீண்டும் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்கள் தெரிவித்த அறிவுரையின்படி புன்செய்ப் புளியம்பட்டி நகரில் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் 54 வீடுகளில் தனிநபர் கழிப்பிடம் கட்ட இடவசதி உள்ளது என கண்டறியப்பட்டது.

இதற்கு தேவையான விபரம் பின்வருமாறு :-

1. மத்திய அரசின் பங்குத் தொகை ( ஒரு கழிப்பிடத்திற்கு ரூ.4000/ வீதம் 54 க்கு ) - 2.16 இலட்சம்
2. மாநில அரசின் பங்குத் தொகை ( ஒரு கழிப்பிடத்திற்கு ரூ.2000/ வீதம் 54 க்கு ) - 1.08 இலட்சம்
3. நகராட்சியின் பங்குத் தொகை ( ஒரு கழிப்பிடத்திற்கு ரூ.2000/ வீதம் 54 க்கு ) - 1.08 இலட்சம்

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் கட்ட மத்திய, மாநில அரசுகளில் நிதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும், நகராட்சியின் பங்குத் தொகை ரூ.1.08 இலட்சம் பொது நிதியிலிருந்து 54 பயனாளிகளுக்கு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அத்தியாவசியம் கருதி பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மொத்த மானியத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு மேற்கொண்டு பின்னர் மத்திய, மாநில அரசுகளிடமிருந்து வரும் மானியத் தொகையினை பொது நிதிக்கு வரவு வைத்தக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 800
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.03.2018–ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 11

2017–2018–ம் நிதியாண்டில் சொத்துவரி, காலியிடவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், தொழில் உரிமக்கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள் ஆகிய வரி இனங்கள் குறைவான சதவீதம் மட்டுமே இதுவரை வசூல் செய்யப்பட்டுள்ளது. எனவே நிதியாண்டு முடிய குறுகிய கால அவகாசம் உள்ளதால் மேற்படி வரியினங்களை உடனடியாக செலுத்தக் கோரி பொது மக்களுக்கு அறிவுறுத்த வாகன ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்ததற்கான உத்தேச செலவினம் ரூ. 50,000 த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூல் பணியின் அவசர அவசியத்தை கருதி உள்ளூர் நிறுவனத்தில் விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்த ராஜா சவுண்ட் சர்வீஸ், புன்செய்ப் புளியம்பட்டி என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் அதற்கான செலவித்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 599/2018/அ2)

**தீர்மான எண் :** 801
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.03.2018–ம் நாளன்று நடைபெற்ற
தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்

பொருள் : 12

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஜவகர் மெயின் ரோடு வணிக வளாக கடை எண். 26 – ஐ கீழ்க்கண்ட கடை உரிமம் பெற்றவர் செப்டம்பர் 17 முதல் மார்ச் 18 வரை ஏழு மாதம் வாடகை செலுத்தாமல் நிலுவையில் வைத்துள்ளதால் அன்னாரின் கடையை பூட்டி சீல் வைக்கப்பட்டது.

| வ. எண் | கடை எண் | உரிமதாரர் – பெயர் | கடையை காலி செய்து நகராட்சி வசம் ஒப்படைத்த தேதி மற்றும் விண்ணப்ப நாள் |
|---|---|---|---|
| 1 | 26 | பி.ஏ.முருகேசன் | 28.03.2018 |

எனவே, மேற்படி கடையின் நிலுவை வாடகை, அதற்குரிய சேவை வரி மற்றும் அபராதக் கட்டணத்தை அன்னாரின் வைப்பு நிதியிலிருந்து ஈடு செய்து கொண்டு மேற்படி கடையின் உரிமத்தை ரத்து செய்து மறு ஏலம் விடவும், தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
   (ந.க.எண். 1135/2015/அ1)

**தீர்மான எண் :** 802
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.03.2018—ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 13**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2018—19 ன் கீழ் பணி மேற்கொள்ள வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி அலுவலகத்திலுள்ள பிரிண்டர்களுக்குரிய டோனர்களில் மை நிரப்புதல் (ஒரு வருடத்திற்கு) | 10900.00 | SWAASTIC GLOBLE SYSTEMS | 0.00 % மதிப்பீட்டிற்கு இணையான விலைப்புள்ளி |
| 2. | | | SGS PRINT TECH | 29.36 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | | | SREE RAKSHA PRINT ZOON | 43.58% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய SWAASTIC GLOBLE SYSTEMS அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 435 /18/இ1)

**தீர்மான எண் :** 803
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.**

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 28.03.2018–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் சாதாரணக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 14**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2018–19 ன் கீழ் பணி மேற்கொள்ள வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் வார்டு மறுவரையறைக்காக வரைபடங்கள் தயார் செய்யும் பணிக்காக. | SAKTHI CONSTRUCTIONS |
| 2. | | KARUPPUSAMY |
| 3. | | MARIAPPAN |

**அலுவலக குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய SAKTHI CONSTRUCTIONS அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை ஏற்கலாம்.
3. (ந.க.எண்.995 /17/இ1)

**தீர்மான எண் :** 804
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.

(ஒப்பம்) ந. தட்சணாமூர்த்தி,
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.